**மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் 1971 இன் 38 ஆம் இலகக நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக

அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- சபை தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- சபையின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 11,024,014 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், அவை இதுவரை பயன்பாட்டில் | மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் சொத்துக்கள் பெறுமானத் தேய்விடப்பட்ட பின்னர், அவ்வாறான சொத்துக்கள் மேலும் பெறுமானத்தேய்விடப்படக் கூடாது. அந்த சொத்துக்கள் பயன்படுத்தக்கூடியதாகக் | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் மேலும் பயன்படுத்தப்படுமாக இருந்தால், அவற்றை மீள் பெறுமதியிட்டு புத்தகங்களில் பதிவு |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றன. இருப்பினும், மதிப்பீட்டுப் பிழையினை கண்டறிந்து அதன் மூலம் குறித்த சொத்துக்களை மீள்பெறுமதியிட்டு புத்தகங்களில் அந்தப் பெறுமதியைக் காட்டுவதற்கு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், உயர் பெறுமதியுடைய சொத்துக்களை மீள் பெறுமதியிட்டு மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படல் வேண்டும். அல்லது அந்த சொத்துக்கள் எஞ்சியவைகளாக இனங்காணப்பட்டு விலைமனுக்களினை அழைத்த பின்னர் மூன்றாம் தரப்பொன்றிற்கு விற்பனை செய்யப்படும் அல்லது முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் பேரில் அவற்றை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். உயர் பெறுமதியுடைய வகைகளை மீள் பெறுமதியிடுவதற்கு 2020 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | செய்வதற்கு அல்லது அத்தோடு, அவ்வாறான சொத்துக்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 16 வளிப் பதனாக்கிகளின் விநியோகம் மற்றும் பொருத்துகையுடன் தொடர்புடைய ரூபா 4,659,000 பெறுமதி மீளாய்வாண்டில் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தப் பெறுமதி மூலதனமாக்கப் பட்டிருப்பதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாகக் காட்டப்பட்டிருந்தது. | இணங்குகின்றோம். | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய நிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 06 நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய குத்தகை வாடகைகள் மீளாய்வாண்டின் கணக்குகளில் ரூபா 11,111,000 தொகையாகக் காட்டப்பட்டதுடன் 01 தொடக்கம் 05 வரையான வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக அறவிடப்பட்டிராது தொடர்ந்தும் காணப்பட்டது. குறித்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 23,038,370 ஏனைய பெறவேண்டிய மீதியின் 48 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | இணங்குகின்றோம். தொடர்புடைய சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய குத்தகை வாடகைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மேலும், அறவிடுகை சாத்தியமற்றமாகக் காணப்படுமானால், முறையான அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் கணக்குகளிலிரந்து அவ்வாறான மீதிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய நிதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,091,964 மொத்த கடன்கொடுத்தோர் மீதியில், மொத்தக் கடன்கொடுத்தோரில் 20 சதவீதத்தை சுட்டிக்காட்டுகின்ற 01 வருட காலப்பகுதியொன்றாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காது தொடர்ந்தும் காணப்பட்ட ரூபா 410,271 கூட்டுத்தொகையான 06 கடன்கொடுத்தோர் மீதிகளை உள்ளடக்கியிருந்தது. | இணங்குகின்றோம். | உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் இனங்காணப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவை முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 13,738,357 மிகைகளுக்கு எதிராக ஒப்பிடுகையில் ரூபா 27,889,471 பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்டிருந்தமையால், நிதி விளைவில் ரூபா 41,627,828 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. பதவியணியினர் தொடர்பான செலவினம் ரூபா 12,363,010 இனால் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் குறைப் பயன்படுத்துகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்த 12 மாதங்கள் காலப்பகுதியுடன் தொடர்புடைய சபை வங்கிக் கணக்குகளில் சராசரியாகக் காணப்பட்ட சேமிப்பு ரூபா 8,210,353 தொகையாகக் காணப்பட்டது. நவம்பர் மாதத்தை தவிர ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் நடைமுறைக் கணக்கில் ரூபா 04 மில்லியன் தொடக்கம் ரூபா 16 மில்லியன் வரையான வீச்சில் தொகையொன்று குறைப்பயன்பாட்டுடன் தொடர்ந்தும் காணப்படுகின்றது. | உடன்படுகின்றேன். | மிகை நிதிகளை முதலீடு செய்வது தொடர்பில் கவனத்தைச் செலுத்துவது பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைச் சபையின் நிதி முகாமையாளர் பதவியை வகித்த உத்தியோகத்தரொருவர் அவர் சேவையிலிருந்து விலகப்படும் பொழுது அவரின் பணிக்கொடையிலிருந்து தொடர்புடைய தொகைகள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் பணிக்கொடை முழுமையாக செலுத்தப்படுமென முகாமைத்துவ சபையின் கூட்டத்தில் தீர்மானத்தைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, சம்பளங்கள் மற்றும் படிகளாக மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 191,919 தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். சுற்றறிக்கைகளின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டிலிருந்து முறையாக நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தர்கள் அவர்களின் சேவையிலிருந்து நீக்கப்படும் போது பெற வேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைச் சபையின் பிரதான தொழிற்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளின் நோக்கில் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் இணக்கப்பாட்டுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் முன்னேற்றத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 20 மில்லியன் தொகையொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றிலிருந்து ரூபா 13.84 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த அதேவேளை ஏற்பாட்டின் 31 சதவீதம் குறைப்பயன்பாட்டுடன் தொடர்ந்தும் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து தொடர்புடைய சுற்றறிக்கைகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. திருத்தங்கள் மற்றும் சேவைகள் உள்ளடங்கலாக கொள்வனவுகளுக்காக மூலதனச் செலவினங்களின் கீழ் விலைமனுக்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரர்கள் முறையாக பதிலளித்திருக்கவில்லை. ஆகையினால், அதே விடயத்திற்காக இரண்டு தொடக்கம் மூன்று தடவைகள் விலைமனுக்கள் அழைக்க வேண்டியிருந்தமையால் சேவைகளினை வழங்குவதற்காக பல மாதங்களாக தாமதமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் இந்த நிலைமையை உருவாக்கியிருந்தது. முகாமைச் சபையின் கூட்டங்கள் கூட பிற்போடப்பட்டிருந்தமையால், செயற்திட்டங்கள் மீதான செலவினங்களுக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வது தாமதமடைந்திருந்தது. அதற்கமைய, செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டவாறு பயன்படுத்த முடியாதிருந்ததென அறிவிக்கப்பட்டது. | ஒவ்வொரு செயற்பாடும் இனங்காணப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் அதன்மூலம் மதிப்பீடுகளினை தயாரித்து வினைத்திறனான முறைமையொன்றில் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படல் வேண்டும். |